பக்கங்கள் 16+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 10 புதன்கிழமை 06.11.2024 | அதிர்வு 97

## டிரம்ப் வெற்றி

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், கருத்துக் கணிப்புகளையெல்லாம் பின்னுக்குத் தள்ளி 02



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# மீன்பிடி அமைச்சராக இருந்து இங்கு என்னத்தைச் சாதித்தீர்?

## தீவக மீனவர்கள் அவலநிலை என்று டக்ளஸை விளாசித் தள்ளிய சுமந்திரன்



(ந.லோகதயாளன்)

**மீன்பிடி அமைச்சராக ஒரு தமிழ் அமைச்சர் 4 ஆண்டுகள் பதவி வகித்தும் கடல் கடந்த தீவுகளில் வாழும் சுமார் 1,500 மீனவர்களின் பிரச்சினையைக்கூடத் தீர்த்து வைக்கவில்லை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.** 02



# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மூவர் விடுவிப்பு

## வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

(கி.வசந்தன்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான தீங்கு விளைவிக்கும் ஆயுதங்களை உடமையில் வைத்திருந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட மூவர் குற்றமற்றவர்கள் எனத் தெரிவித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனால் இன்று விடுவிக்கப்பட்டனர்.

வவுனியா, பெரியபுளியாளங்குளம் பகுதியைச் சேர்ந்த, சிறிசுப்பிரமணியம் கிரிசா, கந்தப்பு கஜேந்திரன் மற்றும் பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த காகைசிங்கம் காந்தரூபன் ஆகிய சந்தேக நபர்களே இவ்வாறு விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 2019 ஆண்டு ஜனவரி மாதம் வவுனியா, சாளம்பைக்குளம் பகுதியில் தீங்கு விளைவிக்கக் கூடிய ஆயுதங்களான 02



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி!

மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பொலனறுவை, சிறிபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுகெலே பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பொலனறுவை, களுகெலே பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தனது வீட்டுக்கு அருகில் அலங்கார மீன் விற்பனை நிலையம் ஒன்றை நடத்தி வந்துள்ள நிலையில் மீன் தொட்டிகளைக் காட்டு யானைகளிடம் இருந்து பாதுகாப்பதற்காகச் சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த மின் கம்பிகளில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிறிபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**டிரம்ப் வெற்றி...**

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார்.

ஜனாதிபதியாக இருந்தவர், அடுத்த தேர்தலில் தோற்று, மூன்றாம் முறை மீண்டும் வென்றதே சாதனையாகக் கருதப்படுகின்றது.

வெற்றிக்குத் தேவையான 270 இடங்களைக் கடந்து கூடுதலாகப் பெற்று டிரம்ப் முன்னிலை வகிக்கின்றார்.

டிரம்பின் வெற்றியைத் தொடர்ந்து அவரது ஆதரவாளர்கள், குடியரசுக் கட்சி நிர்வாகிகள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பயங்கரவாத...**

கிளைமோர் குண்டுகளை உடமையில் வைத்திருந்தனர் என்று கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்படி மூவரும் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் விசாரணையின் அடிப்படையில் பீ அறிக்கை தயார் செய்யப்பட்டு வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு தொடர்பில் நீதிமன்றத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி எதிரிகளுக்கு எதிராக வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைகள் நிறைவு பெற்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகள் பெறப்பட்டு 1996 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க தீங்கு விளைவிக்கும் ஆயுதச் சட்டம் 2 (1) ஆ பிரிவின் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக எதிரிகளான மூவருக்கும் எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச தரப்பு வழக்குத் தொடுநரால் சந்தேகத்துக்கு அப்பால் இறை ஒப்புச்சாட்சியங்கள் சமர்ப்பிக்கத் தவறியமையால் சட்ட விதிகள் வழக்கத்தில் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மேல் நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த நிலையில் இன்றைய தினம் தீர்ப்புக்காகத் தவணையிடப்பட்டிருந்தது.

அந்தவகையில் தீர்ப்பை அறிவித்த வவுனியாமேல்நீதிமன்றநீதிபதிமா.இளஞ்செழியன் எதிரிகளான மூவரையும் விடுவித்து தீர்ப்பளித்தார்.

குறித்த வழக்கில் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை தவிர்ந்து எவ்விதமான ஒப்புதல் சான்றிதழ்களும் வழக்குத் தொடுநரினால் அதாவது சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச தரப்பு வழக்குத் தொடுநரால் சந்தேகத்துக்கு அப்பால் சமர்ப்பிக்கத் தவறியுள்ளதாக நீதிபதி மா.இளஞ்செழியன் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளதுடன், அரச தரப்பின் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் தவறு இழைக்கப்படவில்லை என்ற அடிப்படையில் பிரிவு 134 இன் சான்று கட்டளை சட்டத்தின் பிரகாரம் தீர்ப்பளிக்கப்பட்டு எதிரிகளான மேற்படி மூவரும் வழக்கில் இருந்து விடுவிக்கப்படுகின்றனர் என்றும் அறிவித்தார்.

---

**மீன்பிடி அமைச்சராக...**

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தல் கலந்துரையாடலில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர், மேலும் கூறுகையில்,

“இலங்கை ஒரு தீவாகக் காணப்படுவதால் மீன்பிடித் தொழிலுக்கு உகந்த நாடாகக் காணப்படுகின்றது. ஆனால், போர் அதனைப் பின்கொண்டு சென்றிருக்கலாம். போர் முடிந்து 15 ஆண்டுகளாகியும் அந்த மீனவர்களின் வாழ்வாதாரம் மீளாதமைக்குப் போரைக் காரணம் கூறுவது மட்டுமே ஆட்சியாளர்களின் பணியாக இருக்கின்றது.

இலங்கையில் காணப்படும் கடற்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி கடல் வடக்கில் காணப்படுகின்றது. இதிலே யாழ்ப்பாணத்தில் மட்டும் 1983 ஆம் ஆண்டில் 63 ஆயிரம் மெற்றிக் தொன் கடல் உணவு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இன்று உலகில் நவீன கடல் அபிவிருத்தி என்கின்றனர். 2024 ஆம் ஆண்டில்கூட 37 ஆயிரம் மெற்றிக்தொன் கடல் உற்பத்தியைத் தொட முடியவில்லை. மீனவர்களுக்கான எந்தவொரு அடிப்படைத் தேவையாவது நூறு வீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா எனக் கேள்வி எழுப்பினால் வீதக் கணக்கே கூறப்படுமே அன்றி முழுமை செய்யப்படவில்லை.

குறைந்த பட்சம் யாழ். குடாநாட்டின் கடல் கடந்த 4 தீவுகளில் காணப்படும் 1,500 மீனவர்களின் தேவைகளேனும் நிவர்த்திக்கப்பட்டதா என்றால் அதுவும் இல்லை.

நான்கு தீவுகளிலும் 1,500 மீனவர்கள் உள்ளனர். ஆனால் இன்று வரை ஒரு எரிபொருள் நிலையம்கூட அங்கே கிடையாது. தீவகத்துக்குக் கொண்டு செல்ல முடியாவிட்டாலும் உடனடியாக கடல் கடந்த தீவுகளான நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்ற இடங்களின் படகு துறைகளை அண்டியேனும் குறிகட்டுவான், கண்ணகியம்மன் இறங்குதுறைகளுக்கு அருகில் எரிபொருள் நிலையத்தை அமைக்கவும், மழை, புயல் போன்ற இயற்கைச் சீற்றக் காலங்களில் மீனவர்களின் படகுகளை நங்கூரம் பாய்ச்சிப் பாதுகாக்கவும் துறைமுக வசதியை ஏற்படுத்தி வழங்கியிருந்தால் அவர்கள் தமது வாழ்வாதாரத்தை பெருக்கியிருப்பர். மாறாக அவர்களைத் தொடர்ந்தும் தமது சேவகர்களாக வைத்திருக்கவே விரும்பியுள்ளனர்.” – என்றார்.

# கால்வாயில் சிக்கிய கப் வாகனம் இருவர் மரணம்; இருவர் தப்பினர்

அவிசாவளை, கொஸ்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எஸ்வத்த – மானகட வீதியில் தும்மோதர கால்வாயைக் கடக்க முற்பட்ட கப் வாகனம் ஒன்று நீரில் அடித்துச் செல்லப்பட்டதில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்றுள்ளது.

இதன்போது கப் வாகனமானது சுமார் 50 மீற்றர் தூரம் வரை நீரில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

கப் வாகனத்தில் சாரதி உட்பட நான்கு பேர் பயணித்துள்ளனர். அவர்களில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். ஏனைய இருவரும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்கள் பலல்கொட்டுவ மற்றும் கிரிபத்கொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 27 மற்றும் 69 வயதுடையவர்களாவர்.

மேலும், உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக அவிசாவளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 3 வேட்பாளர்களின் வாகனங்கள் பொலிஸாரால் தடுத்துவைப்பு

## சாரதிகள் மூவர் கைது



(கி.வசந்தன்)

வவுனியாவில் தேர்தல் விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் மூன்று வேட்பாளர்களின் 3 வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், சாரதிகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

வேட்பாளரின் உருவப் படம் மற்றும் ஸ்டிக்கர் பொறித்த வாகனங்களில் வேட்பாளர்கள் பயணிக்க முடியும். வேட்பாளரின்றி அவருடைய உருவப் படம் அல்லது ஸ்டிக்கர் பொறித்த வாகனங்கள் பயணிப்பதற்குத் தேர்தல் திணைக்களம் தடை விதித்துள்ளது.

குறித்த விதிமுறையை மீறி வவுனியாவில் வேட்பாளர்களின்றி வேட்பாளர்களின் ஸ்டிக்கர்களுடன் நடமாடிய மூன்று வாகனங்களே வவுனியாப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர் ப.சத்தியலிங்கம், ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளர் ரசிக்கா பிரியதர்சினி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரது படம் பொறித்த வாகனங்களே தேர்தல் விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், சாரதிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் வாகனங்களுடன் சாரதிகளை நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# தமிழ் கட்சிகள் பிரிந்து காணப்படுவதால் ஈரோஸ் நேரடியாக போட்டியிடுகின்றது!

## வன்னி மாவட்ட வேட்பாளர் முனியசாமி நாகரூபன்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

ஈரோஸ் ஜனநாயக முன்னணி கடந்த காலங்களின் தமிழ் தேசியக் கட்சிகளுக்குத் தமது ஆதரவை வழங்கி வந்த நிலையில், தற்போது தமிழ் தேசிய கட்சிகள் பிரிந்து காணப்படுகின்றன. இந்த நிலையில் மக்களின் ஆதரவை இழந்து வருகிறது. இதனால் நாடாளுமன்றத் தேர்தலில் ஈரோஸ் ஜனநாயக முன்னணி நேரடியாக போட்டியிடுகிறது.

இவ்வாறு மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்க தலைவரும், ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளருமான முனியசாமி நாகரூபன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று செவ்வாய்க் கிழமை (05) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் தேசிய கட்சிகள் பிரிந்து காணப்படுகின்ற நிலையில் மக்களின் ஆதரவை இழந்து வருகிறது. இதனால் வாக்குகள் பிரிந்து வேறு கட்சிகளுக்கு செல்லும் நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த வாக்குகள் வேறு கட்சிகளுக்கு பிரிந்து செல்லாமல் இருக்க குறித்த வாக்குகளை நாங்கள் பெற்றுக் கொள்ளும் முகமாக ஈரோஸ் ஜனநாயக முன்னணி வன்னியில் போட்டியிடுகின்றது.



தமிழ் தேசிய கட்சிகள் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக எதிர் கட்சி அரசியலை மேற்கொண்டு வந்தமையால் தமிழ் மக்கள் பொருளாதார ரீதியில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர். எமது கட்சி நாடாளுமன்ற தேர்தலில் ஆசனங்களை பெற்றுக் கொள்வதன் மூலம் ஆழ்கின்ற கட்சியுடன் இணைந்து மக்களுக்கு பொருளாதார ரீதியாக வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் மாவீரர் எனது தந்தை. அவர் போராட்டம் மூலமாக செய்ய முடியாத சில காரியங்களை நான் அரசியல் ரீதியாக முன்னெடுக்கவுள்ளேன். அதற்காகவே நான் இத்தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

தமிழ் தேசிய கட்சிகளுக்குள் காணப்படும் உள் பூசல்கள், கட்சிகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள பிரிவு மற்றும் வேட்பாளர்களுக்கு இடையிலான பிரச்சினைகள் வடக்கு கிழக்கில் காணப்படுகின்றது.வன்னி மாவட்ட மக்கள் தற்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது காற்றாலை மின் உற்பத்தி, கனிய மணல் அகழ்வு, மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை, விவசாயிகள் பிரச்சினை உட்பட மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளுக்கு எமது கட்சி முழுமையாக செயல்பட்டு தீர்வை பெற்றுக் கொடுக்கும்.

ஈரோஸ் ஜனநாயக முன்னணி ஒரு தமிழ் தேசிய கட்சி என்பதை மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன். எனவே ஈரோஸ் ஜனநாயக முன்னணிக்கு வாக்களித்து எங்களை நாடாளுமன்றம் அனுப்புவதன் ஊடாக மக்களுக்கு எதிர்கொள்ளும் அனைத்து பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வை பெற்றுத் தர முடியும்.– என்றார்.



# கொழும்புத்துறையில் டெங்கு பரவல்; கட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை!

## 13 பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை!!

குடாநாட்டில் தற்போது பெய்துவரும் பருவமழை காரணமாகக் கொழும்புத் துறைப் பகுதியில் டெங்கு நோயின் தாக்கம் கடந்த சில நாள்களாக அதிகரித் துக் காணப்படுகிறது. இந்த நிலையில் சுகாதாரப் பிரிவினர் இதனைக் கட்டுப் படுத்தக் கடும் பிரயர்த்தனம் மேற் கொண்டு வருகின்றனர்.

சுற்றுச் சூழல் துப்பரவின்மை காரண மாகவும் முறையற்ற கழிவகற்றல் செயற்பாடுகள் காரணமாகவும் நுளம் பின் பெருக்கம் அதிகரித்துக் காணப் பட்டது.



இதனைத் தொடர்ந்து துரிதமாகச் செயற்பட்ட யாழ். மாநகர சுகாதார வைத் திய அதிகாரி பணிமனையினர் நுளம் பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் விசேட டெங்குப் பரிசோத னைக் களப் பணிகளை மேற்கொண் டனர். அத்துடன் நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான சூழலையும் இனங்கண்டு அழித்தனர்.

அதுமட்டுமன்றி நுளம்பு பெருகுவ தற்கு ஏதுவான சூழலை வைத்திருந் தவர்கள் இனங்காணப்பட்டுச் சுகாதாரக் குழுவினரால் எச்சரிக்கை செய்யப் பட்டனர். அத்துடன் 13 பேருக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டன.

அத்துடன் நுளம்பை ஒழிப்பதற்கான புகையூட்டல் செயற்பாடுகளும் மேற் கொள்ளப்பட்டன.

இந்த டெங்கு பரவலைக் கட்டுப்ப டுத்தும் செயற்பாடுகளில் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி, கொழும் புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சிவகுமார், பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே.பத்மகுமார் மற்றும் டெங்குக் களப் பணியாளர்கள் ஈடுபட்டனர்.










# மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கான கூர்ப்பு அறிக்கை தயாரிப்புக்கு எதிர்ப்பு!

## கடும் எதிர்ப்பால் நிறுத்தப்பட்டன பணிகள்

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட,வாஸ் கூஞ்ஞ்)**

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஓலைத் தொடுவாய் வள நகர் பிரதேசத்தில் மக்களின் தனியார் காணி உட்பட அரச காணிகளில் அனுமதியின்றி அபகரித்து நடை முறைப்படுத்தும் கனியவள மணல் அகழ்வுக்கான கூர்ப்பு ஆவணம் தயாரிக்கும் நடவடிக்கை இன்று புதன் கிழமை (06) காலை இடம்பெற இருந்தது.

இந்த நிலையில் அந்தப் பகுதி மக்கள், பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு தெரிவித்த நிலையில் அனைத்து செயற்பாடுகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட் டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஓலைதொடுவாய் வள நகர் பிரதேசத்தில் மக்களின் தனியார் காணிகளை அனுமதியின்றி அபகரித்து நடை முறைப்படுத்தும் கனிய வள மணல் அகழ்வுக்கான கூர்ப்பு ஆவணம் தயாரிக்கும் நடவடிக்கைக்காக இன்று புதன்கிழமை (06) மன்னார் மற்றும் தென் பகுதிகளில் உள்ள சுமார் 20 வரையிலான திணைக்கள அதிகாரிகள் பெருந்தொகையான வாகனங்களில் குறித்த பகுதிக்கு வருகை தந்தனர்.

இந்த விடயத்துக்காக அதிகாரிகள் வருகை தருவதை அறிந்த அந்தக் கிராம மக்கள், பொது அமைப்புக்கள் உள்ளடங்கலாக நூற்றுக் கணக்கானோர் ஒன்று திரண்டு வருகை தந்த அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் செல்ல முடியாது பாதையை தடுத்தனர். அத்துடன் அந்த அதி காரிகளுடன் முரண்பட்டனர்.

அத்துடன் இந்தச் சம்பவத்தை அறிந்து மன்னார் பிரஜைகள் குழு, மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய பிரதி நிதிகள்,அரசியல் கட்சி பிரமுகர்கள், வேட்பாளர்கள், மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் சம்பவ இடத்துக்குச் சென்று இந்தப் பகுதிக்கு அதிகாரிகள் வந்தமை தொடர்பில் கேள்வி எழுப்பிய நிலையில் அதிகாரிகள் பொலிஸார் மற்றும் பொது மக்களுக்கு இடை முரண்பாடு ஏற்பட்டது.

தொடர்ந்து பொலிஸாரின் ஒத்துழைப்புடன் அந்தப் பகுதியில் கனியவள மணல் அகழ்வதற்கான இடங்களை பார்வையிடுவதற்கு உட்செல்ல முயன்ற நிலையில் மக்கள் திரண்டு இதற்கான எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இந்த மணல் அகழ்வு மற்றும் காற்றாலை இந்தப் பிரதேசம் எதிர் கொண்டு வரும் பாதிப்புகளைத் தெளிவாக வருகை தந்திருந்த அதிகாரிகளுக்குத் தெளிவுப்படுத்தி குறிப்பிட்ட இடத்துக்கு அவர்களை செல்ல விடாது பாதையை மறித்து அவர்களை திருப்பி செல்ல கோரினர். இந்த நிலையில் கள விஜயத்தைத் தற்காலிகமாக நிறுத்தி அரச பணிக்கு இடையூறு விளைவித்தமைக்காக நீதிமன்றத்தை பொலிஸார் நாடியுள்ளனர். அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் குறித்த பகுதியிலே நீதி மன்ற நடவடிக்கைக்காக காத்திருந்தனர். கடந்த திங்கட்கிழமை பிரதமர் ஹரினி தலைமையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில், மன்னாரில் கனிய மணல் அகழ்வு தொடர்பில் அரசு மீள் ஆய்வு செய்ய உள்ளது என்று தெரிவித்திருந்தார். இந்த நிலையில், அவர் கருத்து தெரித்து இரண்டு நாள்களில் இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளமை கவலை ஏற்படுத்துகிறது என்று பொது மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.













# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் ட்ரம்ப்

உலகின் பெரும் வல்லரசான அமெரிக்காவை அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு வழிநடத்தப் போகின்ற தலைவர் யார் என்பதற்கான தேர்தல் முடிவுகள் எந்த நேரத்திலும் உத்தியோகபூர்வமாக வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று நடைபெற்ற அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனநாயகக் கட்சி வேட்பாளர் துணை ஜனாதிபதி கமலா ஹரிஸை விட தெளிவான முன்னணியில் இருக்கின்றார் என்று தேர்தல் கள நிலைவரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை நேரப்படி இன்று மாலை டொனால்ட் டிரம்ப்பின் வெற்றி பெரும்பாலும் உறுதியாக கூடிய வாய்ப்புகள் இருப்பதாக முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு தேவையான 270 பிரதிநிதித்துவ வாக்குகளை டொனால்ட் ட்ரம்ப் நெருங்கி விட்டார் என்று இன்று காலை கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

தேர்தலில் பின்னர் தான் நடத்த இருந்த வெற்றிக் களியாட்ட நிகழ்வை கமலா ஹரிஸ் தரப்பு ரத்து செய்து இருப்பதாகவும் தெரிகின்றது.

கடைசியாக நடைபெற்ற மூன்று அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்களிலும் குடியரசுக் கட்சி வேட்பாளராகக் களமிறங்கிய டொனால்ட் ட்ரம்ப் முதலாவது மற்றும் மூன்றாவது தேர்தல்களில் வெற்றி பெறும் வாய்ப்பை பெறுகின்றார். இந்த இரண்டிலும் இரண்டு பெண் வேட்பாளர்களை அவர் தோற்கடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

2016 தேர்தலில் ஹிலாரி கிளிண்டனைத் தோற்கடித்த அவர் 2020 தேர்தலில் குறுகிய வித்தியாசத்தில் ஜோ பைடனிடம் தோற்றுப் போனார். இப்போது இந்த மூன்றாவது தேர்தலில் ஜோபைடனின்துணைஜனாதிபதியான கமலா ஹரிஸைத் தோற்கடித்து அவர் வெற்றி பெறும் நிலையில் இருக்கிறார் என்று தற்போதைய செய்திகள் தெரிவிக்கின்றன. அவரது வெற்றி பெரும்பாலும் உறுதியாகி விட்டது. அவர் வெள்ளை மாளிகையில் மீண்டும் வாசம் செய்யப் போகின்றார்.


அமெரிக்க ஆட்சித் தரப்பில் - தலைமைப் பீடத்தில் - ஏற்படப் போகின்ற மாற்றம், அதுவும் இடையில் கிட்டிய தோல்வியினால் அவமானங்களையும், பின்னடைவுகளையும், கசப்புக்களையும் எதிர்கொண்ட டொனால்ட் ட்ரம்பின் கைகளில் மீண்டும் அதிகாரம் கிட்டுவது அமெரிக்க ரீதியில் மட்டுமல்லாமல், சர்வதேச தொடர்பாடல்களிலும், அணுகுமுறைகளிலும், உறவுகளிலும், உலக ஒழுங்கிலும் கூடப் பல்வேறு தலைகீழ் மாற்றங்களைக் கொண்டுவர கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இப்போதைய தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றாலும் இன்னும் ரெண்டு மாதங்கள் கடந்து அடுத்த ஜனவரி 20ஆம் திகதிதான் அவர் புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்க முடியும். அன்றிலிருந்து 2029 ஜனவரி 20 வரை அவர் ஜனாதிபதியாக கடமை ஆற்றுவார்.

இப்போது கிடைக்க கூடிய வெற்றி டொனால்ட் ட்ரம்புக்கு இரண்டாவது ஆட்சி காலம் என்பதால் இந்த ஆட்சி காலத்தோடு அவரது அதிகாரம் பூர்த்தியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. மீண்டும் ஒரு தடவை அவர் ஜனாதிபதித் தேர்தலில் நிற்க முடியாது.

எது எப்படி ஆயினும் உத்தியோகபூர்வமான தேர்தல் முடிவுகள் வருவதற்கும் வெற்றி யார் பக்கம் என்பதை உறுதிப்படுத்துவதற்கும் இன்னும் காத்திருக்க வேண்டி இருக்கும்.

தமது வெற்றி உறுதியான பின்னர் உரையாற்றிய ட்ரம்ப் ''யாரும் செய்யாததை நாங்கள் செய்வோம். ஆட்சி பொறுப்பை ஏற்றதும் வரிகளைக் குறைப்போம். நம் எல்லைகளை வலுவாக்குவோம். இராணுவத்துக்குப் பலம் சேர்ப்போம். நாட்டு மக்களுக்கு ஜனநாயக உரிமை மற்றும் சுதந்திரத்தை அளிப்போம். நாம் இணைந்து இந்த இலக்கை அடைவோம். நாட்டின் எதிர்காலத்தை வளம் ஆக்குவோம். அதனை பாதுகாப்போம்.'' - என்று அமெரிக்க மக்களுக்குச் செய்தி வெளியிட்டிருக்கின்றார்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

# சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயிலுக்கு மாகாண சாஹித்ய விருது!

(மட்டு. துஷாரா)



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள 2024 ஆம் ஆண்டின் இலக்கிய விழாவில், சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் மாகாண சாஹித்ய விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில், மருத்துவம் சார்ந்த ஆக்கங்களை துறைசார் வைத்திய நிபுணர்கள் ஊடாக பெற்றுக்கொண்டு, அவற்றை தேசிய பத்திரிகை வாயிலாக, பொது மக்களுக்கு நோய் பற்றிய தெளிவையும், அதிலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெற்றுக்கொள்ளலாம் என்ற விழிப்புணர்வுகளையும் கடந்த பல வருடங்களாக எழுதி வருகின்றார். அதேவேளை, அவற்றை நூல் வடிவிலும் தொகுத்து வழங்கி வருகின்றார்.

அவ்வாறு தொகுத்தெழுதிய நூல்களில் ஒன்றான "நலன் தரும் மருத்துவம்" என்ற நூல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்டு, அந்த




நூலுக்குச் "சாஹித்ய விருது" கிடைக்கவுள்ளது.

கடந்த வருடம் மாகாணத்திலுள்ள எழுத்தாளர்களிடம் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கோரிய நூல்களில் இவரின் நூலான "நலன் தரும் மருத்துவம்" தெரிவு செய்யப்பட்டு குறித்த திணைக்களத்தால் அச்சிடப்பட்டுக் கொடுக்கப்பட்டது.

இது போன்ற பல மருத்துவ ஆக்கங்களையும், நூல்களையும் தொடராக எழுதி வருகின்றார் பைஷல் இஸ்மாயில்.

அவரால் தொகுத்தெழுதப்பட்ட "நோயும் தீர்வும்" என்ற முதலாவது நூல் கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல தேசிய ரீதியில் இவ்வாறு எழுதப்பட்ட முதலாவது நூலாக உள்ளது. இந்த நிலையில் பாராட்டினையும், வாழ்த்துகளையும் பெற்றமை விஷேட அம்சமாகும்.




# மாவீரர் நினைவு சுமந்த கலைத்திறன் போட்டிகள்

பிரான்ஸ் தமிழர் கலைபண்பாட்டுக்கழகம் வருடாந்தம் நடத்தும் மாவீரர் நினைவு சுமந்த கலைத்திறன் போட்டிகள் கடந்த ( 02) சனிக்கிழமையும் (03) ஞாயிற்றுக்கிழமை யும் நுவாசியல் பகுதியில் இடம்பெற்றன.

ஈகைச்சுடர் ஏற்றலுடன் அகவணக்கம் செலுத்தப்பட்டு போட்டிகள் இடம்பெற்றன. இந்தப் போட்டிகளில் பேச்சு தனி நடிப்பு, கட்டுரை, கவிதை , பாடல் ஆகிய போட்டிகள் இடம்பெற்றன. இதேவேளை, மாவீரர் நினைவு பேச்சு போட்டியின் இறுதிப் போட்டிகள் எதிர்வரும் (10) ஞாயிற்றுக்கிழமை புளோமெனில் பகுதியில் இடம்பெறவுள்ளன.







# பிரான்ஸில் நினைவேந்தல் நிகழ்வு

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல். புலேந்திரன் உட்பட பன்னிருவேங்கைகளின் நினைவாகவும், லெப் கேணல் சந்தோசம் அம்மான், லெப். கேணல் விக்ரர், லெப் கேணல் நாதன், கப்டன் கஜன் மற்றும் 2 ஆம் லெப். மாலதி ஆகியோரது நினைவு சுமந்து பொபினி நகரத்தில் கடந்த (02) சனிக்கிழமை நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

பொதுச் சுடரை பொபினி நகர பிதா அப்துல் சாடி ஏற்றிவைக்க, ஈகைச் சுடரை 26.11.1996 அன்று பிரான்சில் படுகொலை செய்யப்பட்ட கப்டன் கஜனின் சகோதரர்கள் மற்றும் மாவீரர் குடும்பத்தினர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப் பட்டது.

நிகழ்வுகளாக மாவீரர் நினைவு சுமந்த பாடல்கள், கவிதைகள் இடம் பெற்றன.

நினைவுரையை தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு துணைப் பொறுப்பாளர் அமுதன் ஆற்றியிருந்தார்.

காலத்தின் தேவை, இன்றைய சர்வதேச அரசியல் நிலைப்பாடுகள், தமிழர் தேசத்தின் இன்றைய நிலைபற்றியும் மாவீரர்களின் உயிர் ஈகம் பற்றியும் அவர்கள் நினைவுகளைச் சுமந்து தமிழீழ மக்கள் நாம் பயணிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் பாடலுடனும் தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற தாரக மந்திரத்துடனும் நிகழ்வு நிறைவு பெற்றது.



# மாகாண மட்ட விஞ்ஞான போட்டியில் முதலிடம்



(றிஸ்வான் சாலிஹு)

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் திருகோணமலையில் அண்மையில் நடைபெற்ற மாகாண மட்ட விஞ்ஞான பயிற்சி போட்டியில் அக்கரைப்பற்று முனவ்வரா கனிஷ்ட கல்லூரி மாணவி எஸ்.ஆயிஷா அனால் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார் என்று கல்லூரி அதிபர் எம்.ஐ.எம். உவைஸ் தெரிவித்தார்.

மாகாண மட்ட இறுதி போட்டியில் தரம் 10 பிரிவில் சுமார் 100 மாணவர்கள் போட்டியிட்டிருந்தனர். இதில் ஆங்கில மொழி மூலமாகவே தோற்றி இந்த மாணவி இந்தச் சாதனையை படைத்துள்ளார் என்று அதிபர் தெரிவித்தார்.

இவ்வெற்றிக்காக உழைத்த இந்தப் பாடசாலை விஞ்ஞான துறை ஆசிரியர்களுக்கும், மாணவியின் பெற்றோருக்கும், மாணவி எஸ்.ஆயிஷா அனாலுக்கும் அதிபர் பாடசாலை சமூகம் ரீதியாக பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

### கிழக்கில் நான்கு வருடங்களுக்கான

# வாழ்நாள் சாதனையாளர்களாக எட்டு பெருங் கலைஞர்கள் தெரிவு

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் நான்கு வருடங்களுக்கான வாழ்நாள் சாதனையாளர்களாக விருது பெறும் எட்டு பெருங் கலைஞர்களின் பெயர் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் இன்று புதன்கிழமை இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2024 ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ள இலக்கிய விழாவில் "வாழ்நாள் சாதனையாளர்" விருது பின்வரும் கலை இலக்கிய ஆளுமைகளுக்கு வழங்கப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டு - மேனாள் மேராசிரியர். சி.மௌனகுரு - மட்டக்களப்பு, 2022 ஆம் ஆண்டு - மேனாள் பேராசிரியர். எம் ஏ. நுஹ்மான் - அம்பாறை, 'கேணிப்பித்தன்' ச.அருளானந்தம் - திருகோணமலை, 2023 ஆம் ஆண்டு - டி. டபிள்யூ. உபநந்த வெலிக்கல - திருகோணமலை, 'தாமரைத்தீவான்' சோ. இராசேந்திரம் - திருகோணமலை, 'மக்கத்தார்' ஏ.மஜீத் - அம்பாறை, 2024 ஆம் ஆண்டு எஸ்.எல்.எம். ஹனிபா - மட்டக்களப்பு, 'வெல்லவூர்காபால்' சீ. கோபாலசிங்கம் - மட்டக்களப்பு.



# சங்கு வேட்பாளர் பிரகாஷின் பொத்துவில் அலுவலகம் திறப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் இராஜகுமார் பிரகாஷின் பொத்துவில் பிரதேச தேர்தல் பிரச்சார அலுவலகம் நேற்று (05) செவ்வாய்க்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது.

சங்கு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் பிரகாஷ் அலுவலகத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார்.

விழாவில் முதன்மை வேட்பாளர் ச.நேசராசா உள்ளிட்ட வேட்பாளர்கள் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு பிரச்சாரக் கூட்டம் இடம்பெற்றது. அந்தப் பகுதியில் வசிக்கும் அதிகளவான மக்கள் கலந்து கொண்டனர். வேட்பாளர் மக்களுக்கு தனது எதிர்கால நடவடிக்கை பற்றித் தெளிவூட்டினார். விநாயகபுரத்திலும் அலுவலகத் திறப்பு விழா இடம் பெற்றது.






# சக படைப்பாளியையும் ஊக்குவிப்பதே ஓர் எழுத்தாளனின் சிறந்த பணியாகும்!

## கனடா அறிவகம் அதிபர் கா.யோ.கிரிதரன் உரை

எழுத்தாளன் தனது படைப்புக்களை மாத்திரமின்றி சக படைப்பாளர்களையும் ஊக்குவித்து, உத்வேகப்படுத்தி பிரசுரப்பதில் எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் பணி சிறப்பானது.

கனடாவில் நிகழ்ந்த நூல் வெளியீட்டில் கனடா அறிவகம் பாடசாலைகளின் அதிபர் கா.யோ.கிரிதரன் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் கனடாவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியிடப்பட்டது. பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு ஸ்கார்பரோ ரீகிரியேசன் சென்டர் மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் கனடா தமிழ் அறிவகம் மாணவர்களால் தமிழ் வாழ்த்துப் பாடலும், கனடா நாட்டு தேசிய கீதமும் பாடப்பட்டன.

இந்நிகழ்வின் தலைமையுரையை பேராசிரியர். இ. பாலசுந்தரம் வழங்கினார். அத்துடன் சிறப்புரையை தமிழர் தகவல் ஆசிரியர் எஸ். திருச்செல்வம் அவர்கள் வழங்கினார்.

வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை புகழ்பெற்ற வானெலி அறிவிப்பாளர் இளங்குமரன், கனடா தமிழ்ப் பாடசாலைகளின் அதிபர் கா. யோ. கிரிதரன், மற்றும் எழுத்தாளர் திருமதி. சிறி ரஞ்சினி ஆகியோர் வழங்கினர்.



பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை அரசியல் ஆய்வாளர் லெனி மரியதாஸ் நிகழ்த்தினார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் என்றும் இஸ்ரேல் நூலின் அறிமுக வுரையை எழுத்தாளர் மீரா பாரதி ஆற்றினார். அத்துடன் இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை கவிஞர் அகனி சுரேஷ் ஆற்றினார்.

இந்த நூல் வெளியீட்டு நிகழ்வின் சிறப்புரையையும், நூலாசிரியரின் ஊடக – எழுத்து பற்றி உலகத்தமிழர் ஆசிரியர் கமல் நவரட்ணம் வழங்கினார். இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் கனடா அறிவகம் பாடசாலைகளின் அதிபர் கா.யோ. கிரிதரன் மேலும் தெரிவிக்கையில்,

சக எழுத்தாளர்கள், கவிஞர்களின் படைப்புக்களையும்,

தொகுப்புக்களையும் முன்நின்று இவர் வெளியீடு செய்திருக்கிறார். வடமராட்சி ஒபரேஷன் லிபரேஷன் படுகொலைகள் எம் மண்ணின் வரலாற்றில் பதியப்பட்ட துயர வரலாறு. உலகையே அதிர வைத்த படுகொலைகளின் களம் அது. அக்கொலைகளை நினைவு கூரும் வகையில் எட்டு இளம் கவிஞர்களின் “கல்லறை மேலான காற்று “ எனும் கவிதைத் தொகுதியினை 1988 ஆம் ஆண்டு தொகுத்தளித்தவரும் இவரே.

ஈழப்போரின் வலியைச் சுமந்த அகிலன் திருச்செல்வத்தின் கவிதைகள் நூலைத் தொகுத்தவரும் இவரே. அகிலனின் முதலாவது ஆண்டு நினைவாக 1990 அல்ல ‘மரணம் வாழ்வின் முடிவல்ல’ என்ற கவிதைத் தொகுப்பும் வெளிவந்தது.

எழுத்துப் பணிகளில் ஆவணப் படுத்தும் பணிகளில் அதிகம் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஐங்கரன் விக்கினேஸ்வராவின் பல கவிதைத் தொகுப்புக்கள் 1980 களின் இறுதியில் வெளியாயின. இவற்றில் யாழ்ப்பாண நூலக எரிப்பை நினைவு கூர்ந்து வெளியான “அணையாத அறிவாலயம்” பரந்த கவனம் பெற்ற தொகுப்பாகும்.

வரலாற்றை எழுத்தில் கொண்டு வருவது என்பது இந்தச் சமுதாயத்துக்கு ஒரு படைப்பாளி செய்யும் மகத்தான பணியாகும். இவற்றை ஆவணப்படுத்துவதும் காலத்தின் தேவையாகும்.

சமகாலத்தில் நடப்பவைகளின் பதிவுகள் எதிர்காலச் சந்ததியினருக்கு பெறுமதி வாய்ந்த ஆவணங்களாக கை மாற்றப்படுகிறது.

இப்பணியை ஐங்கரன் ஒரு சமுதாய நோக்கோடு அமைதியான முறையில் பொறுப்போடு செய்து வருகிறார்.– என்றார்.





# சிலிண்டருக்கான ஆதரவு நிலை கல்முனை தொகுதியில் கூடுகிறது

## வேட்பாளர் ஜெமீல் தெரிவிப்பு



(மாளிகைக்காடு)

கல்முனை தொகுதியை சிலிண்டர் வெற்றி கொள்ளத் தேவையான தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம். புதிய ஜனநாயக முன்னணி சிலிண்டர் சின்னம் அம்பாறை மாவட்டத்தில் மக்கள் செல்வாக்கைப் பெற்ற கட்சியாக மாறி வருகிறது. கல்முனை தொகுதியில் மக்கள் செல்வாக்குமிக்க மூத்த அரசியல்வாதியாக இருந்த எச்.எம்.எம். ஹரீஸ்க்கு செய்த அநியாயத்துக்கு நாங்கள் பதில் கொடுக்க வேண்டும்.

திகாமடுல்ல மாவட்ட சிலிண்டர் சின்ன மூன்றாம் இலக்க வேட்பாளர் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீல் தெரிவித்தார்.

தேர்தல் செயற்பாட்டு கல்முனைக்கான அலுவலகம் நஜாத் பௌண்டஷன் தலைவர் ஏ.எம். நஜாத் தலைமையில் செவ்வாய்க்கிழமை இரவு கல்முனை 12 இல் திறந்து வைக்கப்பட்டது. இதன் போது மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜெமீல் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர்,

முஸ்லிம் சமூகத்துக்கும் அம்பாறை மாவட்டத்துக்கும் கல்முனை தொகுதிக்கும் நான் மாகாண சபை உறுப்பினராக, அரச வர்த்தக கூட்டுத்தாபன தலைவராக இருந்து செய்த சேவைகள் பற்றி மக்கள் இப்போது மாவட்டம் முழுவதிலும் நன்றியுடன் நினைவு கூர்ந்து வருகிறார்கள்.

நான் கல்முனை தொகுதிக்கு நடந்துள்ள அநீதிக்கு விடை தேடிக் கொடுக்கவே இறுதிநேரத்தில் வேட்பாளர் நியமனத்தில் ஒப்பமிட்டேன். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கும், அவரது கூஜாக்களுக்கும் நாம் பாடம் நடத்த வேண்டிய நேரம் கனிந்துள்ளது.

சகோதரர் ஹரீஸ் இல்லாத வெற்றிடத்தை அவரது நண்பரான என்னைக் கொண்டு நிரப்ப கல்முனை சகோதரர்கள் தமது ஆதரவை அணி திரண்டு இன்று எனக்கு வெளியிட்டது மகிழ்ச்சியளிக்கிறது.

புதிய ஜனநாயக முன்னணியின் சிலிண்டர் சின்னம், மூன்றாம் இலக்க வேட்பாளராக போட்டியிடும் எனது கரத்தைப் பலப்படுத்தி நமது வெற்றிக்காக முழுமையாக களத்தில் இறங்கி தேர்தல் பணி செய்ய கல்முனை மக்கள் முன் வந்துள்ளார்கள்.- என்றார்.

இந்த தேர்தல் செயற்பாட்டு அலுவலகத் திறப்பு விழாவில் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சப்ராஸ் மன்சூர், ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சியின் தேசிய கொள்கை பரப்பு செயலாளர் நூருல் ஹுதா உமர், சமூக செயற்பாட்டாளர் எம்.ஏ. கரீம், சிரேஷ்ட அறிவிப்பாளர் ரோஷன் அஸ்ரப், இளைஞர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எப்.எம். தில்ஷாத் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர். இந்த நிகழ்வில் முன்னாள் அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸின் செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.





# தேசிய வாசிப்பு மாதப் பொது அறிவு போட்டியில் வெற்றிகொண்ட மஹ்மூத்!

(நூருல் ஹுதா உமர்)

2004 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதத்தில் தேசிய வாசிப்பு மாதம் கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்த வகையில் 'வழி காட்டும் தாரகைகளாம் நூல்கள் வாசிப்பால் வென்றிடுவோம் நாங்கள்' எனும் தொனிப்பொருளில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் 2024 ஆம் ஆண்டுக்கான வாசிப்பு மாத நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு இடம்பெற்று வருகின்றன.

தேசிய வாசிப்பு மாதமாகிய ஒக்டோபர் மாதத்தை சிறப்பிக்கும் வகையில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) நூலக குழுவால் ஒழுங்கு செய்யப்பட்ட பொது அறிவுப் போட்டி நிகழ்ச்சி நூலக பொறுப்பாளர் ஏ.எல். நளீம் தலைமையில் கல்லூரியின் நவீனமயப்படுத்தப்பட்ட ஸ்மார்ட் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்லூரியின் முதல்வர் ஏ. பி. நஸ்மியா சனூஸ் கலந்து கொண்டார். மாணவிகளின் பொது அறிவின் மீதான ஆர்வத்தை அதிகரிக்கும் வகையில் நூலக குழுவால் ஒழுங்கு செய்யப்பட்ட பொது அறிவுப் போட்டி நிகழ்ச்சியில் மஹ்மூத் மகளிர் கல்லூரி தரம் 10 மற்றும் 11 பிரிவு மாணவிகளுக்கிடையே தலா ஆறு பேர் கொண்ட இரு குழுக்களுக்கிடையில் மூன்று கட்ட சுற்றுப் போட்டிகளாக இடம்பெற்றன.

பொது அறிவுப் போட்டியின் நடுவர்களாக கல்லூரியின் உதவி அதிபர்களான எம்.எஸ். மனூனா, என்.டி. நதீகா, நிகழ்ச்சி தயாரிப்பாளர் எஸ். எச். ஆமினா உம்மா, தொகுப்பாளராக ஆசிரியர் எம்.ஏ. அஸ்வர், முழுமையான கணினி மயப்படுத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிக்கு கணினி தொழில்நுட்ப உதவியாளர் முஸ்தபா முபாரக் ஆகியோர் நெறிப்படுத்தி நடத்தியிருந்தனர்.

இறுதிவரை விறுவிறுப்பாக நடைபெற்ற பொது அறிவு போட்டியில் தரம் 11 மாணவிகள் 100 புள்ளிகளையும் தரம் 10 மாணவிகள் 70 புள்ளிகளை பெற்ற கொண்டனர். மேலதிக 30 புள்ளிகளினால் தரம் 11 மாணவிகள் சாம்பியனைப் பெற்றுக்கொண்டனர். போட்டி நிகழ்ச்சியில் பங்கேற்ற அதிதிகள் மாணவிகளுக்கும் சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இநத் நிகழ்வில் பிரதி அதிபர்களான ஹாஜியானி எஸ்.எஸ்.எம். சமதா மசூது லெவ்வை, ஏ.எச் நதிரா, உதவி அதிபர் எம்.எஸ் மனூனா, என்.டி. நதீகா, ஏ. தஸ்லிமா, ஆசிரியர்கள், நூலக உத்தியோகத்தர்கள், நூலக சங்கத்தின் மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# உங்களுக்காக போராட வாய்ப்பு கொடுங்கள்

## வயநாட்டில் பிரியங்கா காந்தி தெரிவிப்பு



"நான் நன்றாக போராடுவேன். உங்களுக்காக போராட எனக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள். உங்களை நான் ஏமாற்ற மாட்டேன்."

– இவ்வாறு பிரியங்கா காந்தி வயநாடு தேர்தல் பிரச்சாரத்தில் தெரிவித்துள்ளார்.

கேரளாவின் வயநாடு மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெற உள்ளது. இந்நிலையில், தொகுதிக்கு உட்பட்ட கொடாஞ்சேரி, கிழிசெரி உள்ளிட்ட இடங்களில் பிரியங்கா காந்தி தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டங்களில் பங்கேற்று உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் வயநாடு தொகுதிக்கு எப்போதாவதுதான் வருவேன் என என்னை எதிர்த்துப் போட்டியிடுபவர்கள் கூறுகிறார்கள். இதற்கு நான் பதில் அளிக்க விரும்புகிறேன்.

வயநாடு தொகுதியில் வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு போன்ற அத்தியாவசியப் பிரச்சினைகள் கவனிக்கப்படாமல் உள்ளன. மருத்துவக் கல்லூரி இல்லை, இரவுப் பயண கட்டுப்பாடுகள் உள்ளன, மனித – விலங்கு மோதல்கள் உள்ளன. இத்தகைய பிரச்சினைகளை தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டதற்காக ராகுல் காந்தியைப் பாராட்டுகிறேன். பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு "பிளவு அரசியலில்" ஈடுபட்டு வருகிறது.

நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் பல சிறு மற்றும் நடுத்தர தொழில்களை நான் இங்கு காண்கிறேன். துரதிருஷ்டவசமாக, இந்த நிறுவனங்கள் ஜி.எஸ்.டி. மற்றும் பணமதிப்பிழப்பு நடவடிக்கைகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், பா.ஜ.க.வின் கொள்கைகள், மக்கள் தங்கள் கல்வியை முடித்த பிறகும் வேலை தேடுவதை சவாலாக ஆக்கியுள்ளது. நான் நன்றாக போராடுவேன். உங்களுக்காக போராட எனக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள். உங்களை நான் ஏமாற்ற மாட்டேன்.

ராகுல் காந்தி உங்களுக்கு மிகவும் நன்றியுள்ளவராக இருக்கிறார். அதனால்தான் என்னை இங்கு தேர்தலில் நிற்கச் சொன்னார். தேசத்தின் விழுமியங்களை அழிக்க முயற்சிக்கும் சக்திகளுக்கு எதிராக ராகுல் தனியாகப் போராடிய போது, கடினமான காலங்களில் நீங்கள்தான் அவருக்கு துணையாக நின்றீர்கள். ஒரு பெரிய அவதூறு பிரச்சாரம் இருந்தபோதிலும், நீங்கள் அவருக்கு அன்பையும் ஆதரவையும் காட்டியுள்ளீர்கள். தொடர்ந்து போராடுவதற்கான வலிமையையும் தைரியத்தையும் அவருக்குக் கொடுத்தீர்கள்.

உங்களின் ஆதரவு அவருக்கு கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை ஒற்றுமைக்காகவும், அமைதிக்காகவும், மணிப்பூரிலிருந்து மும்பை வரை அன்பைப் பரப்புவதற்காகவும் நடக்க முடிந்தது. ஒவ்வொரு அடியிலும் வயநாட்டு மக்கள் தன்னுடன் நடப்பதை உணர்ந்ததாக அவர் அடிக்கடி கூறுவார். உங்கள் ஆதரவிற்கு நான் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,"

– என்றார்.

# உதயநிதிக்கு எதிராக மேலும் ஒரு வழக்கு




துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மீது மேலும் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் பி.பிரவீண் சமாதானம் தாக்கல் செய்துள்ள அந்த மனுவில்,

"துணை முதல்வரான உதயநிதி ஸ்டாலின் திமுகவின் கொடி, சின்னம் பொறித்த டி-ஷர்ட் அணிந்து அரசு நிகழ்வுகளில் பங்கேற்பது என்பது அரசியல் சாசன விதிகளுக்கு எதிரானது. கட்சி பாகுபாடின்றி நடுநிலைமையுடன் செயல்பட வேண்டிய துணை முதல்வர் கட்சி சின்னத்துடன் கூடிய டி-ஷர்ட் அணிந்து நலத்திட்ட உதவிகளை வழங்கினால் அது தி.மு.கவின் சார்பில் வழங்குவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்திவிடும்.

அரசு ஊழியர்களுக்கான ஆடை கட்டுப்பாடு விதிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பின்பற்றாதது சட்டவிரோதமானது. எனவே, அரசுநிகழ்வுகளில் பங்கேற்கும்போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கட்சி சின்னம் பொறித்த டி-ஷர்ட் அணிய தடை விதிக்க வேண்டும். மேலும், முதல்வர், துணை முதல்வர் மற்றும் அமைச்சர்களுக் கான ஆடை கட்டுப்பாடு தொடர்பான விதிகளை வகுக்க தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும்" என அதில் கோரியுள்ளார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கட்சி சின்னம் பொறித்த டி-ஷர்ட் அணிவதை எதிர்த்தும், கலாச்சார ரீதியிலான உடை அணிய வலியுறுத்தியும் ஏற் கெனவே சேலையூரைச் சேர்ந்த வழக்கறிஞர் சத்யகுமார் என்பவர் தொடர்ந்துள்ள வழக்கு நிலுவையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.






# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிவுகள்: ட்ரம்ப் முன்னிலை, கமலாவுக்கு பின்னடைவு

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளரும், முன்னாள் ஜனாதிபதியுமான டொனால்ட் ட்ரம்ப் முன்னிலை பெற்றுள்ளார். இன்று காலை நிலவரப்படி அவர் 16 மாகாணங்களில் வெற்றி பெற்றுள்ளார். அவரை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்ட ஜனநாயக கட்சியின் வேட்பாளரும், தற்போதைய துணை ஜனாதிபதியுமான கமலா ஹாரிஸ் 9 மாகாணங்களை வசப்படுத்தி உள்ளார்.

டெக்சாஸ், ஓஹியோ, நெப்ராஸ்கா, நார்த் டகோடா, சவுத் டகோடா, லூசியானா, வயோமிங், இண்டியானா, கெண்டக்கி, அலபாமா, மிஸ்ஸிசிபி, ஃப்ளோரிடா உள்ளிட்ட 16 மாகாணங்களில் ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ளார். வெர்மாண்ட், மாசசூசெட்ஸ், ரோட்ஸ் ஐலாண்ட், கனெடிகட் உள்ளிட்ட மாகாணங்களில் கமலா ஹாரிஸ் வெற்றி பெற்றுள்ளார். கூடவே அதிக எலக்டோரல் காலேஜ் கொண்ட கலிபோர்னியா மாகாணத்தையும் கமலா ஹாரிஸ் கைப்பற்றியுள்ளார்.

எலெக்டோரல் காலேஜ் எனப்படும் வாக்காளர் குழுவை பொறுத்தவரையில் ட்ரம்ப முன்னிலை பெற்றுள்ளார். அவருக்கு இதுவரை 211 வாக்காளர் குழு ஆதரவு கிடைத்துள்ளது. கமலா ஹாரிஸ் 153 பெற்றுள்ளார். வாக்கு எண்ணிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ‘எலக்டோரல் காலேஜ்’ எனப்படும் வாக்காளர் குழு நடைமுறை பின்பற்றப்படுகிறது. அந்த நாட்டில் மொத்தம் 50 மாகாணங்கள் உள்ளன. அந்தந்த மாகாணங்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப வாக்காளர் குழு உறுப்பினர்கள் இருப்பார்கள்.சிறிய மாகாணங்களில் 1 முதல் பெரிய மாகாணமான கலிபோர்னியாவில் 55 வரை வாக்காளர்கள் குழு உறுப்பினர்கள் உள்ளனர். ஒட்டுமொத்தமாக 538 வாக்காளர்கள் குழு உறுப்பினர்கள் உள்ளனர். இதில் குறைந்தது 270 உறுப்பினர்களின் ஆதரவை பெறும் வேட்பாளர், அதிபர் தேர்தலில் வெற்றி பெற முடியும். அந்த வகையில், தற்போதைய நிலவரப்படி, ட்ரம்ப் 211, கமலா ஹாரிஸ் 153 என்ற எண்ணிக்கையை வசப்படுத்தி உள்ளனர்.

ஒரு மாகாணத்தில் குறிப்பிட்ட கட்சியின் வேட்பாளர் அதிக வாக்குகளை பெற்று வெற்றி பெற்றால், அந்த மாகாணத்தின் ‘எலக்டோரல் காலேஜ்’ வாக்குகள் முழுவதும் வெற்றி வேட்பாளரை சென்றடையும் என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து மாகாண வாரியாக வாக்கு எண்ணிக்கை தொடங்கி நடைபெற்று வருகிறது.

ஜனாதிபதித் தேர்தலுடன் அமெரிக்காவில் நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபைக்கான தேர்தல் நேற்று நடைபெற்றது. மொத்தம் 435 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடந்தது. இந்த அவையில் பெரும்பான்மையை எட்ட 218 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. தற்போதைய நிலவரப்படி, ட்ரம்பின் குடியரசுக் கட்சி 170 தொகுதிகளையும், கமலா ஹாரிஸின் ஜனநாயகக் கட்சி 124 தொகுதிகளையும் வசப்படுத்துகிறது.


அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதி தேர்தலில் மொத்தம் 186 மில்லியன் வாக்களிக்க தகுதி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நேற்று நடைபெற்றது. அந்த நாட்டின் 50 மாகாணங்களிலும் வாக்குப்பதிவு நடைபெற்றது. சுமார் 95 சதவீத இடங்களில் வாக்கு சீட்டு நடை முறையிலும், மீதமுள்ள 5 சதவீத இடங்களில் மின்னணு முறையிலும் வாக்குப்பதிவு நடைபெற்றது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் முன்கூட்டியே வாக்களிக்கும் வசதி உள்ளது. இதன்படி வாக்குப்பதிவு நாளுக்கு முன்பே 8.2 கோடி பேர் வாக்களித்திருந்தனர். அதாவது 40 சதவீதம் பேர் முன்கூட்டியே தங்கள் வாக்கை செலுத்திவிட்டனர். மீதமுள்ள வாக்காளர்கள் நேற்று தங்கள் வாக்கை செலுத்தினர்.

அமெரிக்காவில் ஜனாதிபதி வேட்பாளருக்கு மக்கள் நேரடியாக வாக்களிப்பது இல்லை. அதற்கு பதிலாக ‘எலக்டோரல் காலேஜ்’ எனப்படும் வாக்காளர் குழு உறுப்பினர்களுக்கு வாக்களிப்பார்கள். அமெரிக்காவின் 50 மாகாணங்களில் ஒட்டுமொத்தமாக 538 வாக்காளர் குழு உறுப்பினர்கள் உள்ளனர். இதில் 270 வாக்காளர் குழு உறுப்பினர்களின் வாக்குகளை பெறும் வேட்பாளர், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.







# இது அமெரிக்காவின் பொற்காலம் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி உரை

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனல்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ளார். இந்நிலையில், புளோரிடாவில் தனது ஆதரவாளர்களுக்கு மத்தியில் அவர் உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இது அமெரிக்காவின் பொற்காலம். நாங்கள் மக்களை நிச்சயம் பெருமை கொள்ள செய்வோம். எங்களது பணி மற்றும் செயல்பாடு அப்படி இருக்கும். துணை அதிபராக தேர்வாகி உள்ள ஜேம்ஸ் டேவிட் வான்ஸ்’க்கு எனது வாழ்த்துகள். அவர் அந்த பொறுப்புக்கு சரியான தேர்வு. நாட்டின் முதல் குடிமகள் ஆகவுள்ள என் மனைவி மெலானியாவுக்கு வாழ்த்துகள்.

இந்த தேர்தலில் நமக்காக சிறந்த முறையில் பணியாற்றிய எலான் மஸ்குக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். அவர் ஒரு ஜீனியஸ். நாம் அவரை பாதுகாக்க வேண்டும். அது நம் பொறுப்பு. அவரைப் போலவே தேர்தலில் நமக்காக சிறந்த முறையில் பணியாற்றிய அனைவருக்கும் பாராட்டுகளை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

யாரும் செய்யாததை நாங்கள் செய்வோம். ஆட்சி பொறுப்பை ஏற்றதும் வரிகளை குறைப்போம். நம் எல்லைகளை வலுவாக்குவோம். ராணுவத்துக்கு பலம் சேர்ப்போம். நாட்டு மக்களுக்கு ஜனநாயக உரிமை மற்றும் சுதந்திரத்தை அளிப்போம். நாம் இணைந்து இந்த இலக்கை அடைவோம். நாட்டின் எதிர்காலத்தை வளம் ஆக்குவோம். அதனை பாதுகாப்போம்.

உலகத்தின் மிக முக்கிய பணி இது. அதன் காரணமாக தான் இறைவன் எனது உயிரை காத்தார் என நினைக்கிறேன். உங்கள் அனைவருக்கும் நன்றி.” – என்றார் .







# இஸ்ரேலின் வான் தாக்குதலில் காசாவில் 30 பேர் உயிரிழப்பு





இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் காசாவில் குறைந்தது 30 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டடர் என பாலஸ்தீன ஊடகங்களும் மருத்துவர்களும் தெரிவித்துள்ளனர்.

காசாவில் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக ஒக்டோபர் 5 ஆம் திகதி முதல் இஸ்ரேலிய இராணுவம் புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், காசா முழுவதும் இஸ்ரேல் நேற்று முன்தினம் இரவு முதல் நடத்திய தொடர் தாக்குதல்களில் குறைந்தது 30 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என பாலஸ்தீனிய ஊடகங்களும் மருத்துவர்களும் நேற்று தெரிவித்துள்ளனர்.

வடக்கு காசாவில் உள்ள பெய்ட் லாஹியா நகரில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் இரண்டு வீடுகள் சேதமடைந்தன. இந்த தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டனர் என பாலஸ்தீனிய அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனமான WAFA மற்றும் ஹமாஸ் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மத்திய கசாவில் உள்ள நகரமான அல்-சவேதாவில் திங்கட்கிழமை நள்ளிரவில் மேலும் நான்கு பேர் கொல்லப்பட்டனர் என மருத்துவர்கள் தெரிவித்தனர். காசா நகரிலும், டெய்ர் அல்-பாலாவிலும் இரண்டு வெவ்வேறு இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களில் ஆறு பேர் கொல்லப்பட்டனர் என பாலஸ்தீன சுகாதார அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ளனர்.

இதனிடையே, காசாவின் பெய்ட் லாஹியா பகுதி மீது இஸ்ரேலிய விமானங்கள் துண்டுப் பிரசுரங்களை வீசின. அதில், பெய்ட் லாஹியா பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் தங்குமிடங்களை விட்டு வெளியேறாத பொதுமக்கள், உடனடியாக நகரத்தை விட்டு வெளியேறுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. "வீடுகளிலும் தங்குமிடங்களிலும் தங்கியிருபோர் அனைவரும், தங்கள் உயிரைப் பணயம் வைப்பதாகவே அர்த்தம். உங்கள் பாதுகாப்பிற்காக, நீங்கள் தெற்கு நோக்கிச் செல்ல வேண்டும்" என்று அரபு மொழியில் எழுதப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# மின்னல் தாக்கியதில் உதைபந்து வீரர் பலி

பெரு நாட்டில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியின் போது மைதானத்தில் மின்னல் தாக்கியதில் ஜோஸ் ஹியுகோ டி லா குரூஸ் மிஜா என்ற வீரர் உயிரிழுந்தார்.

பெரு நாட்டின் சில்கா மாவட்டத்திற்கு உட்பட்ட /ஹவான்கேயோ பகுதியில் பெல்லாவிஸ்டா மற்றும் சோக்கா ஆகிய இரு உள்ளூார் அணிகள் மோதின.

22 நிமிடங்கள் போட்டி நடந்ததில் 2-0 என்ற புள்ளி கணக்கில் பெல்லாவிஸ்டா அணி முன்னிலையிலிருந்தது.

இந்நிலையில், திடீரென மின்னல் தாக்கியதில், ஜோஸ் ஹியுகோ டி லா குரூஸ் மிஜா என்ற 39 வயதுடைய வீரர் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உடனடியாக கீழே விழுந்துள்ளார்.

அவர் தவிர, குறைந்தது 8 பேர் மின்னல் தாக்கியதில் பாதிக்கப்பட்டனர் என தெரிவிக்கப்படுகின்றது.

உடனடியாக குரூஸ் மிஜா உட்படப் பாதிக்கப்பட்ட வீரர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

எனினும் முன்னதாகவே குரூஸ் மிஜா உயிரிழந்து விட்டார் என வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

குரூஸ் மிஜா தனது கையில் உலோக கைச்சங்கிலி ஒன்றை அணிந்திருந்தார் என்றும் அதனால், மின்னல் அவரை தாக்கியிருக்கக் கூடும் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பக்கங்கள் 03

# கனடா முரசு

புதன்கிழமை 06/11/2024

## அயலவர்களுக்கு உதவியபோது துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான நபர்

கனடாவில் வீட்டை உடைத்து கொள்ளையிட முயற்சித்த நபர்களை தடுக்க முற்பட்ட நபர் ஒருவர் துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகியுள்ளார்.

யோக் பிராந்தியத்தின் 03



# கோயில் மீது காலிஸ்தான் தாக்குதல்: கனடாவுக்கு பிரதமர் மோடி கண்டனம்

இந்து கோயில் மீது காலிஸ்தான் தீவிரவாதக் குழுவினர் திடீர் தாக்குதல் நடத்திய நிலையில், கனடாவுக்கு இந்தியா கடும் கண்டனத்தையும் அதிருப்தியையும் தெரிவித்துள்ளது.

கனடாவின் டொரண்டோ மாகாணத்துக்கு உட்பட்ட பிராம்ப்டன் பகுதியில் உள்ள இந்து சபா கோயில் மீது காலிஸ்தான் தீவிரவாத குழுவினர் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தினர்.

கோயிலில் இருந்த குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட பக்தர்கள் மீதும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். கனடாவில் தூதரக முகாமுக்கு இந்திய அதிகாரிகளின் வருகையைக் கண்டித்து இந்தப் போராட்டத்தில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் ஈடுபட்டதாகத் தெரியவந்தது. C3

# கனடா தீவிரவாதிகளுக்கு அரசியல் இடம் இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

கனடாவின் பிராம்டனில் இந்து கோயில் தாக்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்துள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான கனடா அரசு, தீவிரவாதிகளுக்கு அரசியல் இடம் அளித்துள்ளதாக சாடியுள்ளார்.

நான்கு நாள்கள் உத்தியோக பூர்வ பயணமாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவுஸ்திரேலியா சென்றுள்ளார். அங்குள்ள கான்பெர்ரா நகரில் அந்நாட்டு வெளியுறுவுத் துறை அமைச்சர் பென்னி வோங் உடன் கூட்டாக நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நான் மூன்று விஷயங்களை குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று, குறிப்பிடத்தக்க ஆதாரங்கள் எதையும் வழங்காமல் குற்றச் சாட்டுகளை மட்டும் முன்வைக்கும் முறையை கனடா வளர்த்துக் கொண்டுள்ளது.

இரண்டாவதாக, கனடாவை பார்க்கும்போது, எங்களைப் பொறுத்தவரை எங்கள் நாட்டு தூதர்கள் கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. மூன்றாவது சம்பவம், அந்த நபர் பேசியதைப் பற்றியது. அந்த வீடியோவைப் பாருங்கள். தீவிரவாத சக்திகளுக்கு அங்கு (கனடாவில்) அளிக்கப்படும் அரசியல் C3








# காலிஸ்தானுக்கு ஆதரவாக செயல்பட்ட கனேடிய பொலிஸாருக்கு தண்டனை


கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் இந்துக்கள் மீது தாக்குதல் நடத்திய விடயம் பெரும் பரபரப்பை உருவாக்கியுள்து.

இந்நிலையில், காலிஸ்தான் ஆதரவாளர்களுடன், பணியில் இல்லாத பொலிஸார் ஒருவரும் அந்த கலவரத்தில் பங்கேற்றது தெரியவந்துள்ளது. அந்த பொலிசாரின் பெயர் ஹரிந்தர் சோஹி என்பதாகும்.

சீருடை அணியாத ஹரிந்தர், கையில் காலிஸ்தான் கொடியுடன் இந்தியாவுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பும் கூட்டத்தினருடன் நிற்கும் காட்சிகள் சமூக ஊடகங்களில் வெளியாகின.

அதைத் தொடர்ந்து ஹரிந்தர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என பீல் பகுதி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து அந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# பீல் பிராந்தியத்தில் இடம்பெறும் போராட்டங்கள் குறித்து விசாரணை

கனடாவின் பீல் பிராந்தியத்தில் இடம் பெற்று வரும் போராட்டங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பீல் பிராந்திய பொலிஸார் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

பிரம்டனில் இந்து ஆலயத்திற்கு எதிரில் இடம் பெற்ற போராட்டம் உள்ளிட்ட குறித்த பிராந்தியத்தில் இடம்பெற்ற பல்வேறு போராட்டங்கள் தொடர்பில் தீவிர

C3



## அயலவர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோபிலிடன் பகுதியில் இந்த சம்பவம் பதிவாகிவிட்டது.

அயலவர்களின் வீட்டில் கொள்ளையிட வந்த நபர்களை தடுக்க முற்பட்ட போது துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உள்ளார்.

இந்த கொள்ளை சம்பவம் தொடர்பான பூரண விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

சம்பளம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்,

கயாமடைந்த நபருக்கு உயிர் ஆபத்து கிடையாது என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் சம்பவ இடத்தை விட்டு தப்பி சென்றுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## கோயில் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதலின்போது அப்பகுதி வன்முறைக் களமாக மாறியது. அங்கிருந்த இந்து மக்களை விரட்டியடித்தனர். இதுதொடர்பான காணொலி இணையத்தில் பரவியது.

இந்நிலையில், பிரதமர் மோடி தனது எக்ஸ் வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

" கனடாவில் இந்து கோயில் மீதும், இந்துக்கள் மீதும் திட்டமிட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தசம்பவத்துக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில், கனடாவில் நடக்கும் செயல்களுக்கு இந்தியத்தூதரக அதிகாரிகளை மிரட்டும் போக்கில் நடந்து கொள்ளும் கோழைத்தனமான கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நிர்வாகத்தையும் நான் கண்டிக்கிறேன்.

இத்தகைய வன்முறைச் செயல்கள் இந்தியாவின் உறுதியை ஒருபோதும் பலவீனப்படுத்தாது. இந்த விவகாரத்தில் கனடா நாட்டுஅரசு, நீதியை உறுதிப்படுத்தி சட்டத்தின் கடமையை நிலைநாட்டும் என எதிர்பார்க்கிறோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்ட விவகாரத்தைத் தொடர்ந்து கனடாவுக்கான இந்திய தூதர் சஞ்சய் குமார் வர்மா உள்ளிட்ட 6 இந்திய தூதரக அதிகாரிகளை கனடா அரசு வெளியேற்றியது. இதற்கு பதிலடியாக இந்தியாவில் பணியாற்றிய 6 கனடா தூதரக அதிகாரிகளை மத்திய அரசு வெளியேற்றியது. இந்தியா, கனடா நாடுகளின் உறவுகள் மோசமாகி வரும் நிலையில் முதல் முறையாக கனடாவுக்கு பிரதமர் மோடி கண்டனம் தெரிவித்துள்ளது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இந்நிலையில், கனடாவில் இந்துக்கள் மீதும் இந்து கோயில்கள் மீதும் தாக்குதல்நடத்தியதற்கு இந்தியா கடும் கண்டனத்தையும், அதிருப்தியையும் தெரிவித்துள்ளது.

கனடா தலைநகர் ஒட்டவாவில் உள்ள இந்திய தூதரகத்தின் உயர் அதிகாரிகள் இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,

"டொரண்டோவிலுள்ள தூதரக முகாமுக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்ட காலிஸ்தான் தீவிரவாதிகளால் திட்டமிட்டு இந்து கோயில்கள் மீதும் இந்து பக்தர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கனடாவில் நிலவும் சூழ்நிலையின் காரணமாக, வழக்கமான தூதரகப் பணிகளுக்கும் நிகழ்வுகளுக்கும் அதிகமான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு கனடா நாட்டு அதிகாரிகளிடம் முன்கூட்டியே இந்தியா சார்பில் கோரப்பட்டது.

இருப்பினும், எங்கள் பணிக்கு இடையூறு விளைவிக்கும் இது போன்று நடந்த செயல்கள் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. கனடாவில் வசிக்கும் இந்தியர்களின் பாதுகாப்பு குறித்தும் மிகுந்த அக்கறையுடன் உள்ளோம். இந்து கோயில் மீது நடந்த தாக்குதல் சம்பவத்துக்கு கண்டனத்தைப் பதிவு செய்கிறோம்." என்று தெரிவித்தன.

## கனடா தீவிர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தை அது ஓரளவு வெளிப்படுத்தும் என்று நான் நம்புகிறேன்." - என்றார்.

பிராம்டன் சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த ஆஸ்திரேலிய வெளியுறவுத் துறை அமைச்சர் பென்னி வோங், அந்தச் சம்பவம் இந்தியச் சமூகத்துக்கு அதிருப்தி அளிக்க கூடியது என்றார். அவர் மேலும் கூறுகையில்,

"நீங்கள் விவரிக்கும் காழ்ப்புணர்ச்சி பற்றி எங்கள் நாட்டு உறுப்பினர்கள் வலுவான கருத்துகளை வெளிப்படுத்தினர் என்பதை நான் அறிவேன். குறிப்பாக தீபாவளியுடன் தொடர்புடையது பற்றியது. அது நம்பிக்கையுள்ளவர்களுக்கு மிகவும் வருத்தம் அளிக்கும்" - என்றார்.

## பீல் பிராந்தி...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நகரின் வடகிழக்கு பகுதியில் இடம்பெற்று வரும் போராட்டங்கள் தொடர்பில் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அது குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போராட்டம் நடத்தும் உரிமைக்கு மதிப்பளிக்கின்ற அதேவேளை, பொது மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடு காணப்படுவதாக பொலிஸார் சுட்டிக்காட்டி உள்ளனர்.

அமைதியான முறையில் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் பீல் பிராந்திய பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.